**சி.பி.எண்.01/2013** **06.04.2026**

**ம.த.சாட்சி -1 ராஜேஷ்வரி குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை முதலில் தாக்கல் செய்தது எனது கணவர் சுப்பராயன். சம்பளம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் கணவர் இறந்து இரண்டரை வருடங்கள் இருக்கும். தேதி, மாதம் மற்றும் வருடம் தெரியாது. அவர் இறந்த பின்பு அவருடைய வாரிசுதாரர் என்ற முறையில் மனுதாரர்களாகிய 2 முதல் 6 நாங்கள் இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறோம். இந்த மனுவில் என் கணவர் இறந்த பிறகு உரிய பரிகாரத்தை நாங்கள் திருத்தம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவர் நிர்வாகத்திடம் இருந்து எவ்வளவு பணம் பெற்றுள்ளார் எவ்வளவு பணம் நிர்வாகம் தரவேண்டும் என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் கணவர் கிளார்க்காக பணிபுரிந்து வந்தார். என் கணவர் எந்த பணிநிலையில் இருந்தார் பணிநீக்கம் செய்யப்படும் வரை என்ன பணிபுரிந்தார் என்ற விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவர் கிளார்க்காக தான் பணிபுரிந்து வந்தார். என் கணவர் 22.03.2010 அன்று கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிறப்பித்த சர்சார்ஜ் உத்தரவின் பேரில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். பின்பு 08.11.2010 அன்று என் கணவர் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். இந்த உத்தரவு கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிறப்பித்த உத்தரவானதால் கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்படி இந்த உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு தான் செய்ய வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதற்கு பதிலாக தொழிற்தகராறு மனு எண்.34/2011 என்ற மனுவை என் கணவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதன்பேரில் நிர்வாகம் சரியாக விசாரணை மேற்க்கொள்ளவில்லை என்று அந்த தொழிற்தகராறு மனுவில் தீர்வம் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்வத்தின் அடிப்படையில் தான் இந்த கணக்கீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் இந்த மனுவில் என் கணவருக்கு 01.03.2010 முதல் 31.01.2013 வரை அவருக்கு சேர வேண்டிய தொகைகளை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் சங்கம் பராமரிக்கும் சம்பளப்

பதிவேடுகளின் அடிப்படையில் என் கணவருக்கு 01.03.2010 முதல் 21.03.2010 வரை என் கணவருக்கு சம்பளம் முழுமையாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவரை தற்காலிக பணிநீக்கம் செய்த காலமான 22.03.2010 முதல் அவரை நிரந்த பணிநீக்கம் செய்த காலமான 08.11.2010 வரை அவருக்கு 50 சதவீதம் பிழைப்பூதியம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த விவரங்களை என்னுடைய தொழிற்தகராறு மனு மற்றும் இந்த மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு செப்டம்பர் 2012 முதல் ஜனவரி 2013 வரை என் கணவருக்கு ரூபாய் 67,120 காசோலை மூலம் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் பராமரிக்கும் ஊதியம் வழங்கும் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விவரங்களை என்னுடைய தொழிற்தகராறு மனு மற்றும் இந்த மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு சங்கத் தீர்மானம் 03/2007 - 2008ன்படி என் கணவருக்கு பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் அவர் அளித்த உறுதிமொழியின்படி பணிபுரியாததால் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. மேலும் 2009-2010ம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் படி என் கணவர் ரூபாய் 44,439.40ஐ உரம் விற்பனை செய்த தொகையை கணக்கில் வராமல் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் விவசாய கடன் அட்டை மூலம் உரம் வழங்கப்பட்டு அதற்கு தினப்பேராட்டில் எழுதியுள்ளார் ஆனால் சம்மந்தப்பட்டவர்களுக்கு கடனே இல்லாமல் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறுதி தணிக்கையை பார்க்கும் பொழுது என் கணவரால் சங்கத்திற்கு ரூபாய் 6,48,363.40 நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையை மறைத்து தவறான தகவல்களின் அடிப்படையில் தொழிற்தகராறு மனுவில் உத்தரவு பெற்றுள்ளதாலும் இந்த மனுவிலும் சரியாக கணக்கீடு செய்யாததாலும் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் கணவர் கடைசியாக பெற்ற மாத சம்பளம் ரூபாய் 14,686. ஏப்ரல் 2010 முதல் டிசம்பர் 2012 வரை என்னுடைய கணக்கீட்டு பட்டியலில் நான் குறிப்பிடும் மாத சம்பளம் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் அல்ல என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் நான் கணக்கீட்டு பட்டியலில் சம்பளத் தொகையை குறிப்பிட்டுள்ளேன் என்று மனுவில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. நிர்வாகம் ரிட் மனுவின் உத்தரவின் பேரில் பணம் அளிக்காததால் கன்டம்ப்ட் மனு

எண் 3372/2025 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த மனுவில் திருவண்ணாமலை ஆட்சியர் தரப்பினராக சேர்க்கப்பட்டு அதன் அடிப்படையில் ரூபாய் 5,77,056 நாங்கள் செட்டில்மெண்ட் தொகையாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. சரியான தகவல்களை அளிக்காமல் உண்மையை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.04.06 16:30:39 +0530

Presiding Officer,
Principal Labour Court, Vellore.